INDIAN CHRISTIAN DAY
yeshu bhakti divas

# கொண்டாட்ட வழிமுறைகள்

## அன்புசெய் | சேவை செய் | கொண்டாடு

தரிசனம்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், ஏறக்குறைய 2000 ஆண்டுகளாக இந்தியாவில் இருந்து வரும் அவரது செய்தியையும் கொண்டாடுதல் (அறிவிப்பை வாசிக்கவும்)

அதிகாரபூர்வ தொடக்கம்: ஜூலை 3, 2021 –ல் தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும்.

கொண்டாடக் கூடியவர்கள் யார்?: இந்தியாவில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவரும், மற்றும் இயேசு கிறிஸ்துவையும் அவரது செய்தியையும் கொண்டாட விரும்பும் அனைவரும்.

இயக்கம்: இந்தியாவிலும், உலகெங்கிலும் பல்வேறு மொழிகள், சபைப்பிரிவுகள், மற்றும் பின்னணிகளைச் சேர்ந்தவர்களைக் கொண்டு ஏற்படுத்தும் இயேசுவின் இந்திய சீஷர்கள் என்னும் இயக்கத்தின் அடிப்படைத் தொடக்கம்.

கொண்டாட்டத்தின் நோக்கம் & இயல்பு: தேசிய மற்றும் உலக அளவில், ஜூலை மாதம் 3 –ஆம் நாள் இந்திய கிறிஸ்தவ தினம் / ஏஷு பக்தி திவாஸ் எனக் கொண்டாடப்படும். எல்லாக் கொண்டாட்டங்களும் முற்றிலும் அரசியல் மற்றும் பாகுபாடுகள் அற்றதும், கூடுமானவரை பல்வேறு மொழி மற்றும் பாரம்பரியங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.

அன்பின் செயல்கள்: ஜூலை 3, 2021, சனிக்கிழமை அன்று, சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாக அன்பு மற்றும் தயவின் **ஒரு செயலை**யேனும் செய்வோம்.

– சபைகள்/ஐக்கியங்கள்: திட்டக் குழுவை உருவாக்கி, வாலிபர்களையும் சிறுபிள்ளைகளையும் ஒன்றிணைத்து, சபைக்கு வெளியே சமுதாயத்தில் செய்வதற்காக “**ஒரேயொரு செய்கை**” என்னும் திட்டச் செயல்பாட்டை ஒழுங்கமைக்கவும்.
– தனிநபர்கள்/குடும்பங்கள்: ஒருமனம் கொண்ட நண்பர்களுடன் இணைந்து, சமுதாயத்தில் அன்பு மற்றும் தயவை வெளிப்படுத்தும் “**ஒரேயொரு செய்கை**” என்னும் செயல்பாட்டை ஒழுங்கமைக்கவும்.

கொண்டாட்டக் கருத்துக்கள்:

- ஏழைக் குடும்பங்களுக்கு உணவு அல்லது நல்ல உடைகள் வழங்கலாம்
- தெருக்களை சுத்தம் செய்தல், மரம் நடுதல் போன்றவற்றைச் செய்யலாம்
- கண்சிகிச்சை, பல் சிகிச்சை, மருத்துவம், கல்வி போன்றவற்றிற்கான இலவச முகாம்களை நடத்தலாம்
- இந்திய இசை, நடனம், திருவிழாக்களைக் கொண்ட கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்கலாம்
- ஓவியம், இசை, எழுத்து, மற்றும் பேச்சுப் போட்டிகளை வயதுவாரியாக நடத்தலாம்
- மருத்துவமனைகள், சிறைச்சாலைகளுக்குச் சென்று சந்திக்கலாம்

சமூக ஊடகம் & உலகளாவிய கொண்டாட்டம்: பதாகைகள் & சுவரொட்டிகள் அச்சிடவும். ICD/YBD திட்டவரை மற்றும் சின்னம் வைத்து சமூக ஊடக விபரத்தைப் புதுப்பிக்கவும். கொண்டாட்டங்களை புகைப்படம் எடுத்து ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாக்ராமில் பகிர்ந்து கொள்க. ப்ளாக் (blogs), மற்றும் கட்டுரைகள் வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துக.

கொடுக்கப்பட்ட உபகரணங்கள்: அறிவிப்பு, தரிசன ஆவணம் & கொண்டாட்ட வழிமுறைகளை PDF வடிவில் www.indianchristianday.com என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும் தகவல்களுக்கு, indianchristianday@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்க.